**ஹோமகம பிரதேச சபை**

**கொழும்பு மாவட்டம்**

--------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 08 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர ஹோமகம பிரதேச சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாய பூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) பதிவேட்டுக் கட்டிடத்தில் ஏற்பட்ட தீயினாலான ரூபா 1,202,867 இழப்பை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 413,000 க்கு ஏல விற்பனையாகிய 2 வாகனங்களது கொள்வனவு விலையை வாகனக் கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

(இ) சனசமூக நிலையம், மயானக் கட்டிடம் என்பவற்றினது பெறுமதியாகிய ரூபா 23,265,026 கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) 2016 டிசெம்பரில் வங்கி நேரடியாப் பெற்ற ரூபா 1,530,000 கணக்கிலிடப்படவில்லை.

(உ) தொலைந்த 1261 புத்தகங்களது பெறுமதியாகிய ரூபா 272,615 கணக்குகளில் சீராக்கல் செய்யப்படாததால் கையிருப்புக் கணக்கு அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்குகளின் பிரகாரம் 03 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 22,307,800 ஆகும். அவற்றுடன் தொடர்புடைய உப பதிவேட்டின் பிரகாரம் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 21,354,259 ஆகும்.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2017 செப்டம்பர் 15 ஆந் திகதியளவிலும் ரூபா 1,805,378 பெறுமதியுடைய 01 கணக்காய்வு ஐய வினாவுக்குப் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 13,094,930 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுப்பேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழுஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 124,665,116 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டெழுஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 125,868,478 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன.

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2016 | | | | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய்க்கான விடயம் | 2016 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியல் | உள்ளவாறான அறவீடு | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியல் | உள்ளவாறான அறவீடு | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா | ரூபா | |
| தீர்வையும் வரியும் | 18,614,799 | 16,642,466 | 22,204,858 | 13,720,707 | 49,580,012 | 33,395,852 | 39,130,776 | 43,952,848 |
| குத்தகை வாடகை | 1,207,612 | 5,060,300 | 5,621,955 | 610,808 | 4,098,764 | 5,176,350 | 7,697,306 | 1,577,808 |
| வினோத வரி | 37,812 | 339,659 | 322,216 | 55,254 | 67,115 | 601,720 | 633,920 | 34,905 |

### 2.2.2 தீர்வையும் வரியும்

மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான தீர்வை வரி நிலுவை ரூபா 13,720,707 ஆகும். அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,029,048 நிலுவையும் உள்ளடங்கியிருந்தது. அது மொத்த நிலுவையில் 8 சதவீதமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மரணமடைந்த, சேவை விலகிய, ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 623,981 ஆகும். அக்கடனை அறவிடுவதற்கு நடப்பாண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் உலக வங்கியின் உதவியுடன் பொலித்தீனை துண்டுகளாக அமைப்பதற்கு பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட பேலின் இயந்திரத்தைப் பயன்படுத்தி சபை சேகரிக்கும் பொலித்தீன்களை துண்டுகளாக அமைத்து ஹொல்சீம் நிறுவனத்திற்கு வழங்குவதற்கான நடவடிக்கை 2017 மே மாதம் வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

---

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 34,564 பெறுமதியான மின்சாரப் பொருட்கள், ரூபா 590,625 பெறுமதியான மோட்டார் கிறேடர், பெறுமதி வெளிப்படுத்தப்படாத மின்பிறப்பாக்கியும் டிறக்டர் ஒன்றும் குறைவாகப் பயன்படத்தப்பட்டவாறிருந்தன.

**3.3 இனங்காணப்பட்ட இழப்புகள்**

---

(அ) வேத்தர உப அலுவலகத்தில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின்போது 2 மடிக் கணனிகள் 09 சாதாரண நாற்காலிகள், தட்டெழுத்து இயந்திரம், கைகள் அற்ற 38 பிளாஸ்டிக் நாற்காலிகள் என்பன குறைவாகக் காணப்பட்டன.

(ஆ) தலைமை அலுவலக களஞ்சியத்தில் ரூபா 154,206 பெறுமதியான 156 கொடிக் கம்பங்கள் குறைவாக இருந்தன.

(இ) தொலைந்த 1261 புத்தகங்களது கூட்டுப் பெறுமதி ரூபா 272,615 ஆகும்.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

---

மீளாய்வாண்டின்போது அமுலாக்குவதற்கெனத் திட்டமிடப்பட்ட 574 வேலைகளில் 20 வேலைகளது பெறுமதி ரூபா 8,616,862 ஆகும். இவை கைவிடப்பட்டிருந்தன. ரூபா 75,791,033 பெறுமதியுடைய 113 வேலைகள் நிறைவடையாது இருந்தன.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**(அ) நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

---

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய், செலவினம் என்பவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**(ஆ) உள்ளகக் கணக்காய்வு**

-----------------------------------------

2016 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. போதியளவு உள்ளகக் கணக்காய்வு நடைபெற்றிராததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளது பிரதிகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

-----------------------------------------------------------------

2016 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் அமுலாக்குவதற்குத் திட்டமிடப்பட்ட வேலைகளது எண்ணிக்கை 281 ஆகும். அமுலாக்கப்பட்டவை 39 மாத்திரமே. எவ்வாறாயினும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்காத 441 வேலைகள் மீளாய்வாண்டின்போது அமுலாக்கப்பட்டிருந்தன. இதற்கமைய, சபை செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தபோதும் அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-----------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகினறது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) உள்ளகக் கணக்காய்வு